27th July 1957]

SRI M. C. MUTHUKUMARASWAMY : சர்க்கரை ஆலைகளுக்கு லைசென்ஸ் கொடுக்கும் இடங்களில் அங்கு இருக்கும் விவசாயிகளுக்கு பாதுகாப்பு கொடுக்கப்படுமா? நெய்வேலிப் பகுதியில் விவசாயிகளுக்கு அவ்விதம் நடந்திருப்பதனால் அதே விதமாக இந்த இடங்களிலும் பாதுகாப்பு அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : எந்த விதமான பாதுகாப்பு விவசாயிகளுக்கு வேண்டும் என்று சொன்னால் பதில் சொல்வது சுலபமாக இருக்கும்.

Sathanur Dam Project.

* 282 *Q.*—SRI P. U. SHANMUGAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Sathanur Dam Project has been constructed within the estimated amount;

(*b*) if there is a saving, what the amount saved is; and

(*c*) whether there is any proposal to get water from the Sathanur Reservoir to Tiruvannamalai?

THE HON. SRI P. KAKKAN : (*a*) The work is in progress and has reached an advanced stage of construction. It is anticipated that the work will be completed well within the estimate.

(*b*) The exact savings cannot be worked out at this stage, but it is anticipated that it may be round about Rs. 40 lakhs.

(*c*) There is a proposal to excavate a channel off the left flank of the Sathanur Reservoir to feed the rain-fed tanks between Sathanur Reservoir and Tiruvannamalai, finally tailing into the Samodram tank on the outskirts of Tiruvannamalai town Detailed investigation of this proposal is yet to be taken up.

SRI P. U. SHANMUGAM : சாத்தனூர் திட்டம் இன்னும் ஓரிரண்டு மாதங்களில் முடிந்துவிடும் என்று தெரிகிறது. அது முடிந்ததும் லட்சக் கணக்கான பணம் செலவழித்துக் கட்டப்பட்டிருக்கிற காலனி காலி செய்யப்படும். அப்படிக் காலி செய்யப்பட்ட கட்டிடங்கள் பாழாகாமல் அங்கு ஒரு நல்ல தொழிற்சாலையை, தீப்பெட்டி தொழிற்சாலையை அமைப்பதற்கு சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : அங்கத்தினர் அவர்கள் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

Jail Reforms.

* 283 *Q.*—SRI P. S. CHINNADURAI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have any proposal for jail reforms; and

(*b*) if so, what they are?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The proposals which are based on the recommendations of the Jail Reforms Committee which are still under consideration

[27th July 1957

relate to employment of short-term prisoners in agriculture, installation of power machinery in Central Jail, Salem, opening of a workshop in each Central Jail to carry out repairs to jail machinery and starting of prison agriculture farms.

SRI P. S. CHINNADURAI : உத்தேசிக்கப்படுகின்ற சிறை சீர்திருத்தங்களில் அங்குள்ள கைதிகளுக்கு வாரத்திற்கு இரண்டு நாள் கஞ்சியும், இரண்டு நாள் உப்புமாவும், இரண்டு நாள் இட்டிலியும், ஒரு நாள் பூரியும், காலை உணவு என்ற முறையில் கொடுப்பதற்கும் வாரத்திற்கு ஒரு தடவை மாமிச உணவும் கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தனிக் கேள்வி போட்டால் இப்போது எந்த உணவு கொடுக்கப்படுகிறது, மேலும் எந்த விதமான உணவு கொடுக்கவேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்ல முடியும்.

SRI A. V. P. ASAITHAMBI : இப்பொழுது சிறைச் சாலைகளில் மொட்டை அடிக்கிற பழக்கம் இருக்கிறதா என்பதை அறிய ஆசைப்படுகிறேன். (சிரிப்பு.)

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பல சிறைகளுக்கு நான் சென்று பார்த்ததில் அங்கு யாருமே மொட்டைகளாகக் காணப்படவில்லை.

SRI S. PAKKIRISAMI PILLAI : இப்பொழுது சிறைகளில் 'ஸி' கிளாஸ் கைதிகளுக்கு கேழ்வரகு களி கொடுக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. கேழ்வரகோடு அரிசி நொய்யும் சேர்த்து கொடுக்க ஏதாவது ஏற்பாடு உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : களி மட்டும் கொடுக்கப் படவில்லை, அரிசியும் சேர்த்துத் தான் கொடுக்கப்படுகிறது.

(Sri A. A. Rasheed and Sri K. Anbazhagan rose.)

MR. SPEAKER : The hon. Members need not stand. It is enough if they raise their hands.

SRI A. A. RASHEED : கனம் சின்னத்துரை அவர்கள் சொன்னது மாதிரி சிறைகளில் உணவு கொடுக்கப்பட்டால் வெளியில் உள்ளவர்களும் உள்ளே போய் விடுவார்கள் என்பது மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எந்த நல்ல சாப்பாட்டை கொடுத்தாலும் சிறைக்குப் போவதற்கு சிலர் பிரியப்படமாட்டார்கள்.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, சிறைச் சாலையிலுள்ள கைதிகளுக்கு நல்வழியைக் காட்டுவதற்காக அறநெறிகள் போதிக்கின்ற திருக்குறள் போன்ற நூல்களை வைத்து அவர்களுக்கு ஒழுக்க நெறிகளை பயிற்றுவிக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விடுமுறை நாட்களில் இவ்விதம் பல இடங்களிலும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

SRI P. G. MANICKAM : ஸார், ஜெயில்களில் இருக்கும் கைதிகளில் பெரும்பாலோர் ஹரிஜன மக்களாக இருப்பதால், "ஜெயில் ரிபார்ம் கமிட்டியில்" தாழ்த்தப்பட்ட ஹரிஜனங்களில் சேர்ந்தவர்களையும் போடுவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்கள் ஹரிஜனங்களுக்கு வேண்டி பரிந்து பேசுவது போல் இவ்விதம் ஹரிஜனங்கள் அதிகமாக சிறைகளில் இருக்கிறார்கள் என்று சொல்லுவதே அந்த சமூகத்தை குறைப்படுத்துவதாகும். அங்கு பெரும்பாலும்

ஹரிஜனங்கள் இருக்கிறார்கள் என்பதை நான் ஒத்துக்கொள்ள முடியாது. இந்த ஜெயில் கமிட்டி 1950-ல் போடப்பட்டது. இது நன்றாக பரிசீலனை செய்து 279 சிபார்சுகள் செய்திருக்கிறது. அதில் 260 சிபார்சுகள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. இந்தக் கமிட்டி அவ்வப்போது போடுவதில்லை.

SRI M. P. SUBRAMANIAM : ஸார், சிறைக் கைதிகளுக்கு உணவு அளிப்பதில் ஜில்லாவுக்கு ஜில்லா வித்தியாசம் இருப்பது அமைச்சர் அவர் களுக்குத் தெரியுமா? ஜில்லாக் கலெக்டர்களின் உத்தரவின் பேரில் சில ஜில்லாக்களில் ராகி, சில ஜில்லாக்களில் சோளம் இவ்விதமாக கொடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக சேலம் ஜில்லாவில் ராகி மாத்திரம் கொடுக்கப்பட்டு வருகிறது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இவ்விதமில்லாமல் அரிசியும் சேர்ந்து கலப்படமாக கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்கள் 30 வருஷங்களுக்கு முன்னால் கிடைத்த தகவலை வைத்துக்கொண்டு கேள்வி கேட்பதில் பயனில்லை. நான் அறிந்த வரையில் சேலம் சிறையில் நல்ல உணவாகத்தான் கொடுக்கப்பட்டு வருகிறது.

SRIMATHI T. N. ANANDANAYAKI : சிறையில் இருக்கும் பெண் கைதிகளுக்கு க்ஷேம நல வேலைகள் ஏதாவது கற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்விதம் கற்றுக் கொடுக்கப்பட்டுவருகிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் பெருமைப்பட்டுக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன், அதாவது சிறைகளில் பெண் கைதிகளின் எண்ணிக்கை அதிகமாகக் குறைந்து விட்டது.

SRI M. KALYANASUNDARAM : நண்பர் எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் கேட்டது 30 வருஷங்களுக்கு முன்னால் உள்ளது அல்ல. உணவுக் கட்டுப்பாடு வருவதற்கு முன்னால் அரிசி உணவை மாற்றி புஞ்சை தானியங் கள் கொடுக்கப்பட்டு வந்தது. அந்தச் சமயத்தில் 7 அவுன்ஸ் அரிசியும் பாக்கி 9 அவுன்ஸ் புஞ்சை தான்யங்களாக கொடுக்கப்பட்டது. இப்பொழுது அதே ரீதியில்தான் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே இதை மாற்றுவ தற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது கொடுக்கப் படும் உணவில்அதிகமாக கொடுக்கப்படுவது அரிசி உணவுதான். மற்ற உணவுகளிலும் சத்து இருக்கிறது என்பதைப் பார்த்துதான் அந்த உணவுகளும் கொடுக்கப்பட்டு வருகிறது.

SRI M. KARUNANITHI : சிறைச்சாலைகளிலுள்ள பள்ளிக் கூடங்களில் அங்குள்ள ஆசிரியர்கள் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இனிமேல் அவ்விதம் இல்லாமல் இருக்கவேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வெளியே இருக்கிற பள்ளிக்கூடங்களிலும் ஆசிரியர்கள் சிலர் தூங்கிக்கொண்டிருப்பதாக கேள்விப்படுகிறோம். இவ்விதம் தூங்காமல் இருப்பதற்காக அந்தந்த சிறை அதிகாரிகள் அவ்வப்போது கவனித்துக்கொள்வார்கள்.

MR. SPEAKER : Let us proceed to the next question.

SRI K. VINAYAKAM : Sir, I wanted to put a supplementary on the previous question.

MR. SPEAKER : If at all there is an hon. Member who catches the eye of the Speaker most, it is the hon. Member Sri Vinayakam. We will now proceed to the next question.